தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2020

ஆண்டு: 7 திகதி: 20/06/2020

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. ச. பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ______________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 30 | |
| வினா 5 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக**

முற்காலச் சிறுவர்கள் பல விதமான விளையாட்டுகளை விளையாடினர். அந்தப் பலதரப்பட்ட விளையாட்டுக்கள் காலப் போக்கில் சிறிது சிறிதாக மறைந்து வருகின்றன. இக்காலச் சிறுவர்களும் தங்கள் பொழுதை இன்பமாகக் கழிக்கப் பல்வேறு விளையாட்டுகளில் ஆர்வமாக ஈடுபடுகின்றனர். எனினும், இக்காலச் சிறார்கள் அறிந்திருக்கும் விளையாட்டுகள் பாரம்பரிய விளையாட்டுகளினின்றும் வேறுபட்டவை.

பாரம்பரிய விளையாட்டுகளை இன்றைய இளம் பெற்றோர்கள் நன்றாக அறிந்திருக்கவில்லை. அதை ஓரளவு அறிந்தவர்களும் தம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. மாறாகப் பல நவீன விளையாட்டுகள் விளையாடத் தேவையான பொருள்களைத் தாராளமாக வாங்கித் தருகிறார்கள். அவை விலையுயர்ந்தவையாக இருந்தாலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. பிள்ளைகள், வீட்டிலேயே இருந்து இவ்வகை விளையாட்டுகளை விளையாடுவதன்வழி அவர்களுடைய அறிவும் சிந்தனையாற்றலும் வளர்ந்தால் போதும் என்று பெரும்பாலான பெற்றோர்கள் எண்ணுகிறார்கள்.

நவீன விளையாட்டுப் பொருட்களின் விலை அதிகமாயிருக்கின்றது. ஆனால், நம் பாரம்பரிய விளையாட்டுப் பொருட்கள் மிகவும் விலை குறைந்தவை. அவற்றில் நாம் கவனம் செலுத்துவோமானால் பாரம்பரிய விளையாட்டுக்களையும் எதிர்காலச் சந்ததியினர் அறிய வாய்ப்பு ஏற்படும்.

பாரம்பரிய விளையாட்டுகளான கபடி, பம்பரம் விடுதல், தாயம், சிலம்பம், பல்லாங்குழி, ஐந்துகல் முதலிய விளையாட்டுகளை விளையாடுவதால் குழு உணர்வும், ஒற்றுமையும் வளர்கின்றன. அதோடு, சிறுவர்கள் சேர்ந்து பழகி ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கிறது. நம் பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடுவதால் நம் பண்பாட்டைக் கட்டிக் காக்க இயலும். இதனால், சிறுவர்கள் பண்புநலன்கள் பெற்ற பொறுப்புமிக்க குடிமக்களாக உருவாக வழி ஏற்படும்.

1. பாரம்பரிய விளையாட்டுகள் மறைந்து வரக் காரணம் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2. பிள்ளைகளின் அறிவும் சிந்தனையாற்றலும் வளரப் பெற்றோர்கள் என்ன செய்கின்றனர்?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

3. எதிர்காலச் சந்ததியினர் பாரம்பரிய விளையாட்டுகளை அறிய நாம் என்ன செய்ய வேண்டும்?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4. பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடுவதால் விளையும் பயன்கள் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

5. தற்காலச் சிறுவர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டுகள் யாவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(5x3 = 15 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

1. பரம்பரை

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

2. விருந்தோம்பல்

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

3. தமிழ்ச் சங்கங்கள்

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

4. இளம் சந்ததியினர்

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

5. அரசாங்கம்

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

6. தகவல்கள்

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

7. அன்னப்பட்சி

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

8. முயற்சி

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

9. நம்பிக்கை

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

10. திருமணம்

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(10 x 2 = 20 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

1. நான் வீட்டில் இருந்தேன்.

   அப்போது பாரம்பரிய சமையல் செய்யக் கற்றுக் கொண்டேன்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

2. கலா கதைப் புத்தகத்தை வாங்கினாள்.

   அவள் அதை ஒரு வாரத்தில் படித்து முடித்தாள்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

3. யோகன் யோகப் பயிற்சி முறைகளைக் கற்றான்.

   அவன் தினமும் பயிற்சி செய்தான்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

4. அரசன் செங்கோலாட்சி செய்தான்.

   அப்போது மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

5. பவித்திரா பரதநாட்டியத்தைப் பயின்றாள்.

   அவள் பலமேடைகளில் ஆடி மகிழ்ந்தாள்.

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 30 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. உங்கள் பூர்வீக பிரதேசத்திற்குச் சென்ற பயண அனுபவத்தைப் பற்றி விபரித்து எழுதுக.
2. உயிர்கள் மீது அன்பு செலுத்துதல் வேண்டும் என்பதை விளக்கும் ஒரு கற்பனைக் கதை எழுதுக.
3. நீங்கள் கலந்து கொண்ட ஒரு பிறந்தநாள் விழா பற்றி எழுதுக.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவுசெய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

1. உன் ஆசிரியர் ஒருவர் அண்மையில் தம் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு நன்றி தெரிவித்து நீ எழுதும் கடிதம்.
2. நீ உயர்நிலைப் பள்ளித்தேர்வுக்கு எவ்வாறு ஆயத்தம் செய்தாய் என்பது குறித்து விளக்கி உன் தோழனுக்கும் / தோழிக்கு நீ எழுதும் கடிதம்.